தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தொடக்கக்கல்வி - தனியார் பள்ளிகளில் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு சிறப்பு நல நிதி ரூ. 5000/- வழங்குவது சம்பந்தமான தெளிவுரை - வழங்கப்படுகிறது.

பள்ளிக்கல்வித் துறை

அரசாணை (நிலை) எண். 258 நாள் 27—9—2000

படிக்கப்பட்டவை:

அரசாணை (நிலை) எண். 432 கல்வி நாள் 26—[illegible]—1985

---

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட ஆணைப்படி தனியார் பள்ளியில் பணி புரிந்து ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு பிற அரசு அலுவலர்கள் போன்று சிறப்பு நல நிதியிலிருந்து ரூ. 5000/- வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படுகின்றது.

2235 சமூக பாதுகாப்பும் நலனும்-CF, அரசிடமிருந்து மானியம் பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடை திட்டம்-தொடக்கக்கல்வி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை 10. பங்குத் தொகைகள் - 01 குறிப்பிட்ட நிதிக்கு தொகை கொடுத்தல் (2235 60 200 CF 10(3))

2. இந்த கணக்கின் மதிப்பீட்டு அலுவலர் தொடக்கக்கல்வி இயக்குநர் ஆவார். மதிப்பீடுகள் சரியாக செய்யப்படாததால், ஒதுக்கீடு குறைவு ஏற்படும் போது சிறப்பு நல நிதித் தொகை மறு ஒதுக்கீடு வரை தள்ளிப் போடப்படும் நிலை ஏற்படுகிறது. இது ஓய்வு பெறும் அலுவலர்களுக்கு சிரமமான நிலையை உருவாக்குகிறது. இந்நிலையை சீர் செய்ய பின்வரும் வழிமுறைகள் வகுக்கப்படுகின்றன.

1. ஆண்டுதோறும் ஓய்வு பெற இருக்கும் ஆசிரியர் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு தொடக்கக்கல்வி இயக்குநர் இதற்கான மதிப்பீடுகளை உரிய காலத்தில் அனுப்ப வேண்டும்.

2. இது அரசு ஊழியருக்கு / ஆசிரியருக்கு ஏற்பளிக்கப்பட்ட திட்டத்தின்படி ஓய்வு பெறும் தேதியன்று வழங்கப்பட வேண்டிய தொகையாதலால் இத்தொகையை அலுவலருக்கு விடுவிக்கும் பட்டியலை கருவூல அலுவலர் நிதி ஒதுக்கத்தை (Appropriation) வற்புறுத்தாமல் அனுமதிக்கலாம். மேலும் இத்தொகைக்கான பட்டியலை கருவூலங்களில் சமர்ப்பிக்கும் போது நிதி ஒதுக்கத்தை (appropriation) பட்டியலில் குறிப்பிட வேண்டியதில்லை என்றும் பணம் வாங்கும் அலுவலர்கள் (Drawing Officers) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

3. திருத்திய மதிப்பீடு அளிக்கப்படும்போது நான்கு மாத செலவுத் தொகையைக் கணக்கில் கொண்டு உரிய தொகையை தேவைப்படின் கூடுதல் தொகையாக துணை மதிப்பீடுகளிலோ / இறுதி துணை மானியத்திலோ சேர்க்க தொடக்கக்கல்வி அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஆணை இத்தேதியிட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

3 இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு.எண். 2501/துசெ.பெசெ/2000 நாள் 19—9—2000-ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். எ. கௌரிசங்கர்,
அரசுச் செயலாளர்.